கணபதிதுணை

ஸ்ரீ பராசக்திசகாயம்.

---

வளம்பொருந்திய பனைசைமாநகரென்னும்

வடகலைவேள்வி,

நாட்டரசன் கோட்டையில்

எழுந்தருளிய,

# ஸ்ரீபராசக்தி கண்ணுடையநாயகி அம்மன்பேரில்.

மானகு ,

விஸ்வக்ரு,

**மு. முத்துகிர்ஷ்ண வுபாத்தியாயரால்**

திருப்பாடற்றிரட்டும், சோலைமலை சுந்தரராஜபெருமாள்

பேரில் திருப்பதிகமும், திருவெற்றிநகரம்

ஸ்ரீ பராசக்தி பாகம்பிரியாள்

பேரில் திருப்பதிகமும்,

திருப்பரங்குன்றம் சண்முகநாதர்பேரில்,

இரட்டையெதுகைக்கட்டளைக்கலித்துறையும்,

இயற்றப்பட்டு

---

இரங்கோன் :

ஸ்ரீ பாண்டியன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி ஷூ தைமீ

**1913**

இதன்விலை அணா ௪.

உ

## ஸ்ரீ பராதேவதைசகாயம்.

காப்பு வெண்பா.

விண்ணுடையார்மண்ணுடையார் மேவிப் பணிபனைசைக்
கண்ணுடையாண்மீதுபதி கம்புகல—வெண்ணுந்
தரசடில மீதரவிந் தம்புனைபி சன்சே
யரசடிவினயகன்காப் பாம்.

## மடக்கடிப்பதிகம்.

ஆறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விடையாளையடியர்வினைவிடையாளை யென்னையினிமேலும் பூவிற்
படையாளைமூவிலைவேற்படையாளைப்பணியாரொப்பாகத்தேய்ந்த
இடையாளையூழியினுமிடையாளைமூவுலகு மீன்றுகாக்க[மாதோ
வுடையாளைப்பனைசையிற்கண்ணுடையாளை யுள்ளுமெனதுள்ள( )

சுகத்தாளையதரநற்கிஞ்சுகத்தாளைச் சுகத்தினெழிற்றுண்டம்போ
நகத்தாளையிருதனப்பொன்னகத்தாளையன்பர்நவில்வரநக [லு
மகத்தாளையறிஞர்விரும்பகத்தாளைமூவரண்டரரசாருஞ்ச[னல்கு
முகத்தாளையெழினிறைசுமுகத்தாளைப் பணிந்துபவமோகிப்
போமே (உ)

வாராளைவஞ்சகர்முன்வாராளைத்தன்னமம் வழுத்தாரைக்கண்
பாராளைமணியுறும்பொற்பாராளைவன் மனப்பாவிகட்குவீடு
தாராளைநறுமலர்ப்பூந்தாராளை நினைபவர்சித்தத்தைவிட்டுப்
பேராளைச்சொலுமனந்தம்பேராளை யனுதினமும்பேணுவோமே( )

அணியாளைமணிக்குழைகாதணியாளையன்பர்பவ வரியின்மூழ்கப்
பணியாளைப்பணியவிர்வெம்பணியாளை யேடவிழும்பாரிஜாதக்
கனியாளையன்பிலரைக்கனியாளையிமயவரைக் காவலன்கண் [மே
மணியாளைநனியெழிற்பெண்மணியாளை யென்நாளும்வணங்குவோ

கனத்தாளையுளையரிவாகனத்தாளை யடியவரைக்காக்கும்நல்ல [ல்
மனத்தாளைப்புவியைநியமனத்தாளைச் சாந்தொழுகுமையார்கூந்த
வனத்தாளையெழினிறையெளவனத்தாளைத் தினந்தினமும்வளரு
முற்றுத்
தனத்தாளைப்பங்கயவதனத்தாளை யனுதினமுந்தரிசிப்போமே(ரு)

சண்டாளேயுலகையுரைக்கண்டாளேக் கடலனேயகருணேநாட்டம்
வண்டாளேத்துடியிடைதுவண்டாளேநெரிபுருவ மதியீர்கூருந் [த்
துண்டாளேயிறுதியிற்பூத்துண்டாளேயெழிற்குறங்குஜோதிவாழை
தண்டாளேவைகலுங்கோதண்டாளேயெப்பொழுதுநதரிசிப்போமே

பலத்தாளேக்கிரிசெய்தவப்பலத்தாளேநள்ளிருளேப் பகர்கூந்தற்சை
வலத்தாளேச்சுகமருள்சேவலத்தாளேச்சசி திருபாமாதுநாணும்
நலத்தாளேயருள்விழிப்பானலத்தாளேப்பணிவிலனை நலியச்செய்யு
சலத்தாளேத்தனமிணேயசலத்தாளேப்பணிந்து பவந்தணந்து [ஞ்
[வாழ்வாம் (எ)

பாட்டாளேயிருவரிசைப்பாட்டாளேப் பாம்புபுலிபார்க்கமன்று
ளாட்டாளேயெனேநரகிலாட்டாளேயிரசிதவ சலநேரொற்றை
மாட்டாளேயெனேக்கைவிடமாட்டாளே மல்லல்வடகலேசேர்வேள்வி
நாட்டாளேயெனேப்பிணியினுட்டாளே பணிந்துசுகநண்ணுவேனே

மாயாளேமகிடனேமுன்மாய்த்தாளேமூவுலகு மற்றுளோர்க்கும்
ஆயாளேயடியர்மனதாய்வாளே நவமணிப்பூணணியுந்திண்டோள்
வேயாளேத்தமிழ்மாலேவேய்ந்தாளேத்தூயாளேவிளங்குந்தொண்டை
வாயாளேப்பரமனுக்குவாய்த்தாளேயாத்தாளே வணங்கிவாழ்வாம்()

கரியாளேமுப்புரத்தைக்கரித்தாளேநற்கருணேக் கடலேவேங்கை
யுரியாளேப்புகரிபத்தையுரித்தாளேப்பொய்யனையோர்நாளும்வந்தா
தரியாளேப்பிறைமௌலிதரித்தாளேயளகையெனச் சாற்றுந்தால
புரியாளேயருணேக்கம்புரிந்தாளேயெத்தினமும்போற்றுவோமே()

முற்றும்.

---

ஸ்ரீமத்பரதேவதைசகாயம்.

## பலசந்தக்கும்மி.

சீர்வளர்தென்பன சாபுரிமேவிய
தேவியருட் கண்ணுடையவண்மேல்
ஜெகமேவிய புகழால்வளர் குமிபாடிட அரனர்தரு
தேசிவினயகன்காப்பாமே.

பண்டுசண்டாசுரன் றன்னேவதைத்திடப்
பாரில்வருங்கண்ணுத்தாய்மீது

பலசந்தமு நலமுந்திகழ் தமிழின்புறு குமியன்பொடு
பாடமுருகர்பதந்துணையே.

தாலபுரத்திலெந்நாளும்வளர்கண்ணுத்
தாயெனவந்தபராபரைமேல்
தமிழ்மாலையி லுயர்வாகிய குமிபாடிட மதுரேசர்பொற்
றாள்கயற்கண்ணிபதந்துணையே.

அன்பர்கள்கேட்டவரமுதவுமெங்க
ளன்னைகண்ணம்மைபுகழ்பாட
ஆரார்பணி நீரோடுநல் வாலார்மதி சூடேர்சடை
யண்ணல்சோழீசர்பதந்துணையே.

மூவுலகத்துக்குமன்னைகண்ணுள்ள
முதல்விமேற்சந்தக்குமிபாட
முருகார்துள பமுமாமக ளையுமார்பினி லணிமாதவன்
முண்டகப்பாதந்துணையாமே.

பூவுலகத்துள்ளவன்பர்பிணிமுற்றும்
போக்குமருட்கண்ணுத்தாய்மீது
புகலுங்குமி யெழில்தங்கிட வருள்பொங்கிய கலைமங்கைதன்
பொற்கமலப்பதங்காப்பாமே.

செங்கமலத்திருவாழ்பனைசைப்பதித்
தேவிகண்ணுனந்திமீதுகுமி
சிறியேனுரைசெயவாரிஜ'மலர்மீதினி லுறைமாமகள்
சேவடியென்றுந்துணையாமே.

தாரணியெங்கும்புகழ்கொண்டதென்பனை
சைப்பதிக்கண்ணுடையாண்மீது
தகையார்குமி யிசைபாடிட மறைதேர்சிவ னடியார்சம
யாசரியர்பதங்காப்பாமே.

## கலிப்பா.

கண்ணுடையதாயருளாற்காப்புப்பகர்ந்தபின்பு
திண்ணமுடன்மின்னார்கள்சேர்ந்துகும்மி யாடுதற்கு
வண்ணமுலைமாதரசிமங்கையர்கள் பேருரைத்துக்
கெண்ணியமாய்த்தானழைக்குங்கெம்பீரஞ் சொல்வேனே

# கும்மி.

திருமங்கையைநிகர்பொற்புள்தோகையே-அடி
தினமுங்கும்மிபயில்சித்திரரேகையே
பருவந்தருநவரத்தினவல்லியே யிதழ்
பவளந்தனை நிகர்சித்திரவல்லியே.

பானலந்தரு தேனினும்பெரி தானவின்சொலி தேவகுஞ்சரி
பாரவஞ்சன வார்கருங்குழல் மாரதி
ஆனனஞ்சசி பானலம்பிணை மானெனுங்கணி வானரம்பையும்
ஆசைமிஞ்சிய வாலசுந்தரி பாரதி

புவியோர்விலை மதியாநவ ரத்னமே-கிளி
பொருவாநல மொழியார்சுக ரத்னமே
கவிஞோர்மகி ழிசைபாடிடும் வஞ்சியே யிருள்
கனமேவிய குழலாரப ரஞ்சியே

மஞ்சுதுஞ்சள கஞ்சிறந்திடு பம்பரம்பொரு கொங்கையிங்கித
மங்கைசுந்தரம் வஞ்சிமங்களம் நாயகம்
கஞ்சமஞ்சிய பஞ்சுறும்பத வஞ்சிகுந்தள மஞ்சுளந்தரு
கஞ்சனங்கன மின்சொல்கண்டுறு காயகம்

கிண்ணத்தன முளகாஞ்சன மாலையே-யுயர்
வண்ணத்தணி புயபூந்துணை மாலையே
எண்ணுங்கணி கரமிஞ்சிய தேனம்மே-யுயர்
பண்ணுங்கனி மொழியும்புகல் மீனம்மே

நினைத்தாலொரு விழிப்பார்வையில் தவத்தாரையும்
நொடிப்போதினில் தனக்காகிட வளைப்பாள்துணை பூஷணி
மனத்தாலொரு கணப்போதிரு கடற்பாரையும் ஒளிப்பாள்புவி
மதிப்பாகிய குணத்தாள்நய பாஷணி

அதிசுந்தர முகபங்கய மோகினி குண
மறிவுந்தயை யினுமிஞ்சுவி வேகிநீ
மதிமிஞ்சிய வதிநண்புறு கோமளம்-சந்திர
மதிகுஞ்சர முயர்சுந்தரி சாமளம்

அடிமங்கள மடிசங்கரி சீதையேமுடி
யசலந்தனை நிகர்கொங்கையி ராதையே
துடிகோளரி யிடையாய்பது மாசனி நய
சுகமீதெனு மொழிசேர் திரிலோசனி

யிணைச்செப்பினை நிகர்ப்பொற்றன நடச்சித்திர வெழிற்சித்தினி
யிசைக்குப்பொனு லசத்தத்தையும் நாணுவாள்
பிணைச்சக்கினள் வருக்கைக்கனி பிகத்துக்கிணையுடைப்பத்மினி
பிடிக்குட்படுமிடைக்கற்பினள் பேணுவாள்

கருமஞ்சன குழலாய்தம யந்தியே-அடி
கமலந்தினம் வருவாயடி முந்தியே
உருவஞ்சிகி யெனும்வஞ்சிம னோகரி முக
முயர்சந்திர னிகருங்கரு ணாகரி

அதிசுந்தர மிகுமங்கையர் வாருங்கள்-நம
தனைசங்கரி முனம்வந்தணி சேருங்கள்
சுதினத்திது மிகவுத்தமம் பாருங்கள்-நய
சுதிமத்தள முயர்தித்தியுஞ் சேருங்கள்

வட்டவாரிதி சுற்றுநீள்புவி யட்டமாதிசை மெச்சுநீள்புகழ்
மட்டிலாதுயர் முத்தமாளிசை பாடுவாள்
விட்டஞானிகள் கிட்டமால்தரு நட்டமாடிடு புத்தியேமிகு
மெட்டுமேவிய சக்கமாள்விளை யாடுவாள்

மணிமிஞ்சிய மனரஞ்சனி மாதெங்கே தினம்
வளருந்தன மிணைகஞ்சனி மாதெங்கே
பிணையம்பகி திருமங்கைநீ கூட்டிவா எழில்
பெறுதஙகமை தனையுஞ்சனை காட்டிவா

மஞ்சங்குழல் ரங்கந்தனைக் கூவடி தினம்
வந்தண்டிடு முன்ரங்கையை மேவடி
கொஞ்சுங்கிளி யிந்த்ராணியைச் சேரடி முடி
கும்பந்தன நங்காயிவ ளாரடி

பத்தியுற்றம னத்திசத்துவ நர்குணத்துயர் முக்கணர்க்குறு
பத்தனைப்பணி நற்சிவப்பியி தோமினே
மத்திகைத்திர ளூற்றலைத்திட வச்சிரப்பணி மொய்த்திடப்புரி
மட்டில்மற்பர தத்திறத்தைநீபா ர்மினே

முத்தழகினை யித்தருணநீ கூட்டியே வந்தால்
முத்தொழில்பது மத்திணைகரம் நீட்டியே
தத்திமிதக தச்செணுதக தோமெனப் பர
தத்தொழில் முறை நிர்த்தனமிடு வாள்மினே

வண்டாடிய தண்டார்குழல் மேனகை யிங்கு
வந்தாலவள் பிந்தாதுயர் வானகை
கண்டாரென நின்றுடுவள் சேடியேகன
கந்தேடியே யிங்கேயழையோடியே

நாளமொத்திடு ரோமநர்கொடி வாழைநற்றுடை சிலநர்குண
நாகரத்தின மாதிமுத்தமி தோவனே
காளியுத்தமி வாலைபத்தினி நீலிபொற்றிரி சூலிபொற்புறு
காதையைச்சொலி வார அற்புதம் பார்மினே

மானிகர்சுழல் ஜானகிகுழல் காரடி-அவள்
வாரதுமென சீரடியிதோ பாரடி
வானவர்புகழ் தேனுமைகொள்மீ னாட்சியேபொன்னி
வாரதையறி வாயிதுநல காட்சியே

மஞ்சனநடை யஞ்சனைமிகு சூடிக்கை யுடன்
வந்திடும்வித மென்சொல்வேனென வேடிக்கை
வஞ்சகவிழி மங்களம்வரு மோடியேயிந்த
மண்டலமிசை கண்டெவர்சொல்வர் சேடியே

பத்திமிஞ்சிய சித்தசுந்தரி முத்தமங்கநி னைத்திடும்பலி
முத்திதங்க மணிக்கலன்களைப் பூட்டியே
நித்தமும்பர தத்தின்மிஞ்சுவி சித்திரந்தரு பொற்புகந்திடு
நிர்த்தனம்புரி யுத்தமந்தெரி பாட்டியே

கனக்குங்கும நயச்சந்தன மிகுக்கும்பரி மளக்கொங்கையள்
கதிர்க்கிண்கிணி யொலிக்கும்பத வாணியே
சினக்கும்புகர் முகக்கொன்பிடி நடைப்பெண்கொடி
துணைச்சிங்கமு சிதப்பண்புகல் சமர்த்துந்தெரி பேணியே

பதமீதினி லணிநூபுரம் பூட்டுவீர்-அறு
பதமோவெனும் விழிமீதுமை தீட்டுவீர்
மதனேரிடை தனிமேலதுகில் பூணுவீர் நவ
மணிவீசிய கதிர்மேகலை பேணுவீர்

மஞ்சுகாரிருள் துஞ்சுவார்குழல் மிஞ்சநாண்மல ரும்பல்சூடுமின்
வம்புமாமுலை தங்கவேயிசை சேருமின்
அஞ்சவோசைச தங்கைமாமணி பஞ்சிநேரடி தங்கவேயுமின்
அந்தமாகிய சந்தமானது கூறுமின்

கனகாபர ணமுமேமிகப் பூட்டுவீ ருயர்
கடிமாமலர் நறுமாலைகள் சூட்டுவீர்
பனிநீர்பரி மளவாசனை பூசுவீர் ஒரு
பயிலாகிய வொயிலானது பேசுவீர்

அனையானக னுமைசேவடி நேடுவீ ரிசை
யதிமேலமன முடனேசுதி கூடுவீர்
கனமாநய முடனேகுமி பாடுவீ ரொயில்
கதிதாளமு மிசைவாய்விளை யாடுவீர்

---

கலிப்பா.

இவ்விதமாகத்துறைப்பெண்ணேந்திழையார் பேருறைத்தூச
செவ்வியுடனகூவமின்னார் சேரவந்து சேர்ந்தபின்பு
மௌவன்மலர்சூடிமணிபூண்மிகப்பூண்டு
கொவ்வையிதழ்மாதர்முளைக்கொட்டிவிளையாடினரே.

## முளைப்பாட்டு.

மஞ்சதனைக்குழல்காட்டமதலைமதிநுதல்காட்டக்
கஞ்சமதைமுகங்காட்டக் கன்னியர்கள்குமியடித்தார்

வில்லதனைநுதல்காட்ட வேலையிருவிழிகாட்ட
வெல்லமதைமொழிகாட்ட மெல்லியர்கள்குமியடித்தார்

கஞ்சனத்தைக்கனங்காட்டக் கனிபவளமிதழ்காட்ட
மிஞ்சுதுகிர்க்கொடியதனை விரல்காட்டக்குமியடித்தார்

அஞ்செவிநல்வளைகாட்ட வணிவளையைக்களங்காட்ட
கஞ்சமதைக்கரங்காட்டக் கன்னியர்கள்குமியடித்தார்

நாசிகுமிழினைக்காட்ட நல்லமுத்தைநகைகாட்ட
மாசில்கழைதோள்காட்ட மங்கையர்கள்குமியடித்தார்

மின்னதனையிடைக்காட்ட மெல்லரம்பைதுடைகாட்ட
அன்னமதைநடைகாட்ட அரிவையர்கள்குமியடித்தார்

உந்தியுந்திதனைக்காட்ட உதரம்வடமதைக்காட்ட
தந்திமருப்பினைவருந்துந் தனமடவார்குமியடித்தார்

கனபுருவவில்லினைச் சக்கரவாகநிகர்களபத்
தனங்கண்டுவா்தனிலொளியத் தையலர்கள்குமியடித்தா

செங்கரவண்டோசைகண்டு செறிகுழல்வண்டோடுவதை
யங்கறிந்துதனமிரண்டு மசைந்தாடக்குமியடித்தார்

தனவனரயைக்கொடியிடையோ தாங்குமெனவேமயங்கி
மனமிரங்கிக்காலிலணிமணிச்சிலம்பு புலம்பிடவே

ஆலமுறைகருநாகம் அம்புலியாமெனவதனம்
சாலும்வழியேறவிருதனவனரகள் வளர்ந்துவிம்மி

வழியிலையென்றணிவாகை மாலைமருமலர்புனைந்து
கழிகெருவமுடனடைக் கன்னியர்கள்குமியடித்தார்

செங்கரத்திற்சரிகடகஞ் செறியுமொலிகலகலென
சங்கமிகும்பணிதரளத் தாரசையக்குழையிலங்க

கார்குழலுஞ்சரிந்திடவே கனமலர்த்தேன்சொரிந்திடவே
வார்குலவுந்தனமடவார் மகிழ்ந்துகும்மியடித்தனரே.

## சந்தக்கொச்சகம்.

சந்தனகுங்குமகந்தமிகுந்திடு சந்தநரந்தமணிந்திடுகொங்கையர்
கொந்தலர்மிஞ்சளசஞ்சரியும்படி கும்மியடித்தாடியபின்
சந்தமுயர்ந்திசைகின்றபெரும்பயில் தந்திரமிஞ்சியறைந்தனைசங்க
சுந்தரியெங்குநிறைந்தவள்தன்புகழ் சொல்லிவிளையாடினரே [ரி

### வேறு.

கொண்டலென மண்டுகுழற்கோதையரோவாரும் ஸரம்
வேதையைநீர்தீரும் கூடிவிளை யாடுவதற் கோடிவந்துசேரும்
தண்டமிழ்பண் கொண்டகுமி கண்டுநிகர்பாடும் கெதிகொண்டு
விளையாடும் தாஷ்டிகவிளை யாட்டினிலே மேட்டிமைநீர்தேடும்
அண்டியவன் ருெண்டர்துயர் கண்டனஞ்செய்தல்லி-அடி
முண்டகத்தின்மெல்லிஆதியரன்பாதிகொண்டமாதுநுதல்வில்லி
சண்டனுயி ருண்டிடுசா முண்டிதிரிசூலி உய
ரண்டரனுகூலி சங்கரிப யங்கரிம தங்கிகிருபாலி

செங்கமல மங்கைபணி யுங்கமலசரணி எழில்
தங்கிவளர்தருணி திங்களொடு கங்கையில குடம்பனகா பரணி
பங்கயலோ சனிமதுர பாஷணிகல் யாணி வளர்
தேசிநவகோணி பார்வதிசாம் பவிகெவுரி யாரணியும் வேணி
மூவுலகந் தேவர்பதியாவையுமே பெற்றுள் உயர்
தேவியெனுநற்றுய் புத்திரற்கு நித்தமும ளித்துமுலை யூற்றுள்
பாவலர்சொன் மேவுதொடை தாவுபுயவஞ்சி குயில்
கூவுவதின்மிஞ்சி பண்டருமின் கண்டுமொழி கொண்டவப ரஞ்சி

சங்கொடுசா ரங்கமணி யுங்கரியோன் றங்கை புவிபொங்கவருள்
கொங்கை சக்தியன்பர் பக்திகண்டு முத்திதரு நங்கை
செங்கதிரு மங்குமொளி தங்குபிரகாசி யெழி
லங்கமிகுதேசி செல்வமதி வல்லமையி னல்லமகராசி
பத்திசெய்யு முத்தமரை யெத்தினமுங் காப்பாள் மிருகஸ்தி பிணி
தீர்ப்பாள் பாக்கியவானு க்கியபின் சிலாக்கியகதி சேர்ப்பாள்
சத்திசெவ்வேளத்திமுகனைத்தருபூம்பாவை பணியுத்தமர்க்குந்
தேவைசான்றபொரு ளான்றகல்வி தோன்றவருள் பூவை

கன்னல்ரச மென்னமிகு நன்னயஞ்சேர் மொழியாள் கட[யழியாள்
லென்னுமருள்விழியாள் கஞ்சனரி யஞ்சனமால் துஞ்சினுமெய்
தன்னைநித முன்னுமவர்க் கன்னையென மேவிப் பய மென்னவெனக்
கூவிச் சட்டமுட னிஷ்டவரங் கட்டளைசெய் தேவி
கலியுகத்தின் மலிபுதுமை வலிமைமிகக் காட்டி புவிமெலிபிணியை
யோட்டிக்காசினியை நேசமுடன் காத்திடுசீமாட்டி
தலமகிமை வலவர்களுஞ் சொலவும்வசமாமோ இவ் வுலகு
சமமாமோ சாற்றிடில்வான் மூர்த்தியுடன் தீர்த்தநிகராமோ

---

### வெண்பா

விண்ணுமண்ணும்போற்றும் விமலைகண்ணுத்தாய்பெருமை
யெண்ணிச்சிறந்துசொல்லி யேபயின்மேரும பெண்மணி
களையாறி நாட்டியமார்க் கக்குமியும் பாடி
விளையாடநீர்வருகுவீர்.

### வேறு.

சந்திரனேர்முக மங்கையரேகிண்ணங்
தன்னைப்பழித்திடுங் கொங்கையரோ
தந்திரமீறும் மின்னாரிங்கே வந்துநீர்சேரும் சிலம்புபதந்தனிற்
சேரும் யிசையினைச் சந்தமாய்க்கூறும் யிருகையும் தட்டும்புது
மெட்டின்சரித் திட்டங்குமி கொட்டும்மெனத் தையலர்கும்மியடி
த்தாரோ அன்னை துய்யவள்காணநடித்தாரோ (க)

மன்னும்பாத விதம்போலேயஸ்த மலரபிநயத்தினாலே
மாதரேநில்லும் செண்டித்தெதிர் மாதுடன்செல்லும் லயந்தவறுது
பனைசொல்லும் நடஞ்செய்து வாதிபைவெல்லும் கெலித்தலர் வா
கைத்தொடை நீர்கைக்கொடு வேகத்தோடு பூகக்களம் வனையுமெ
ன்னப்ப டித்தாரோ வகை தனையறிந்து நடித்தாரே (உ)

தங்குமலர்த்தொடையுந்தரளமணித்தாழ்வடமார்பமிசைபுரளத்
தனங்கள்குலுங்க இளைஞர் மனங்கள்கலங்கப் பணிகளினங்களில
ங்க நகைப்பல்லினங்கள் துலங்கச் சிலம்புகள் தடையேயிலை கொடி
யேநிகர் இடைபாரிதொ ஒடியும்மெனச் சத்தித்திடநடமாடினர்
மிகத் தித்தித்திடவிசைபாடினர் (ங)

பங்கயச்செங்கையில்வண்டொலிக்கக்குழற் பன்மலர்வண்டினங்கள்
கெலிக்கப் பண்சுதிகூட மொழிகண்டு வெண்சுதைவாட மணிக்கலை
யெண்மணியாட முகங்கண்டு தண்மதியோட மெய்யெங்கணும்
பளபளெனக் கலகலெனப் பணியுரசச் சலசலெனப் பரிபுரஞ்சிலம்ப
நபடித்தார் தங்கள் தரியலர்புலம்பப்படித்தார் (ச)

காந்திமணிக்குண்டலமாடவளர் கனதனங்கண்டிடைவாடக் காற்கதிமிஞ்ச பரதத்தின் மார்க்கமுநெஞ்ச நிறைந்துயர் தீர்க்கமும்விஞ்சச் சிலம்புக ளார்க்கநற்கஞ்ச மெனத்திகழ் கயினலபி நயமாமுறை ஜயமேவுவி னயமேகொடு கானரசமிகப்பாடினர் விண்ணின் மேனகைநேர்நடமாடினர் (௫)

அன்னமெனுமென்னடையாளே நல்லருள்பெருகுங்கண்ணுடையாளே அற்புடையாளே மிகுந்திடும்பொற்புடையாளே நிறைந்திடுங் கற்புடையாளே கனியிதழ்துப்புடையாளே விளங்கிடும் ஆயேவரைசேயே துணைநீயே யருள்வாயே யென அன்னவர்கள்துதிபாடினர் வெகுநன்னயமாய்விளையாடினர் (௬)

மன்னியசோலைக்குயில்கூவும்நல் வளமிகுந்தென்பனைசைமேவும் மாலினிசித்தி தருந்திரிசூலிநற்பத்தி யுள்ளோர்கண்மென்மேலுநற்புத்தி பெறவருணீலிசிற்சத்தி யிளஞ்சாயன் மயிலேமொழிகுயிலே விழியயிலே யெனப்பயிலே சொலி மாதர்குமியிசைபாடினர் நல்வினோதமிகநடமாடினர் (எ)

கங்கைபுவிமங்கைபூமாதுவெண் கமலத்துதித்திடுநாமாது கஞ்சநற்பாதம்பணிகொள்ளும் வஞ்சியெப்போதும் அன்பர்மதிமிஞ்சநற்போதம் தருமபரஞ்சிநல்வேதம் துதிசெய்யும்காரணி நற்பூரணி யித்தாரணியாள் நாரணிகண்காணக்குமியிசைபாடினர் ரம்பைநாணத்தனிநடமாடினர் (அ)

அஷ்டதிசையும்பணிசரணிபொறி யாடரவமணியாபரணி யந்தரிநீலி பகையடக்குந்திரிசூலி அடியர்க்குகந்தனுகூலி நவமணியுந்திகழ்மோலிசிரத்தணி யாதீமதிபாதிபுனை ஜோதீயெழின்மாதே யென அற்புதக்கும்மிபடித்தாரே பெண்கள்பொற்புடன்சுற்றிநடித்தாரே (௯)

மாதர்க்கரசிநவகோணிதிரு மான்மகிழ்தங்கைமலர்வேணி மையெனுங்கேசி யன்பர்க்கருள்செய்மகராசி கதிரொளிமெய்யுறுதேசி சிவபரனுய்யுநன்னேசிதினந்தினம் வளர்சந்தன களபந்திகழ் புளகம்பரி மளமிஞ்சிய மாமுலையன்னையைப்பாடினர் பெண்கள்நேமமுடன்விளையாடினர் (௰)

---

வேறு கும்மி.

செந்தாமரைப்பொன்முகத்தினள்கிளி நந்தாமூக்கெனுநகத்தினள்
சேலெனும்விழிபாலெனுமொழியாலிலை வயிறகத்தினள்
மாந்தளிர்நிகர்தேகத்தாள்வளர் பூந்தனச்சக்ரவாகத்தாள்
மஞ்சனநடைவஞ்சிநேரிடை மஞ்சுளகளப்பூகத்தாள்
கொண்டலைநிகர்கேசத்தாள்ஒளி மண்டியபிரகாசத்தாள்
குதிக்கும்பந்தினைக்குதிக்குநேரென மதிக்கும்பாவலர்நேசத்தாள்

அபயவரதக்கரத்தினுள்பகை யசுரரைக்கொல்லுமுரத்தினுள்
அணிமறுகிற்பொற்பணிகுவிந்திடுங் கணிகரத்தாலபுரத்தினுள்
துண்டாகும்பிறைப்பாலத்தாள்விந்தை கண்டாசைப்படுங்கோலத்
[தாள்
துதிக்குமுந்தியின்மதிக்கும்பூவைக் கதிக்கப்பாலிக்குஞ்சீலத்தாள்
புருவம்வில்வள்ளைக்காதினுள்சண்டன்புவியில்வீழ்ந்திடக்காதினுள்
பொற்பாரிதழ்கோவைதுப்பாம்விரற்பூவை யிப்பார்பணிபாதப்போ
[தினுள்
குமுதப்பூவைநிகர்வாயாள்வனை யமுதைப்போலுதவுஞ்சேயாள்
கோலப்புறவடியாமையுரோமக்கொடிமனை நாளமும்ஞாலத்தவ
[ரிணைபேசவருந்தாயாள்
காகளநேர்கணைக்காலினுள் கற்கடகமெனுமுழந்தாளினுள்
கதலிநேர்துடைபரடுநேர்துலே கதிரெனுங்கரவாளினுள்.

---

வேறு கும்மி.

என்றுதுதித்துவிளையாடிமாத ரெல்லோருங்கும்புகும்பாய்க்கூடி
நின்றன்னைதன்னருளாலாடிமாசம் நேரும்பவுர்னமையைத்தேடி
கனகப்பாலிகையிற்றெளித்துவைத்த கனமுளைவளரக்களித்துத்
தினமும்பூசித்ததையெடுத்துப்பெண்கள் சிரத்தில்வைத்துத்தெரு
வீதியிற்சுற்றிவிளையாடியன்னை மேவுந்திருவிருப்பைநாடிச்[வடுத்து
சீதகமலத்திருக்குளத்தின்முளை சேர்த்துக்கண்ணம்மைபதமுளத்
[தில்
எண்ணியேசன்னதிநாடினார் மகிழ்ந்தின்னிசைமங்களம்பாடினார்
கண்ணுடையாளைப்பணிந்தாரோநீற்றைக் கையினில்வாஙகியணிந்
[தாரோ
தோகையர்பின்னுமுன்கூடினரோசுப சோபனம்வாழியும்பாடினரோ
வாகைபுனைகண்ணுத்தாய்வாழிகய மாமுகன்முருகவேள்வாழி
சண்டனைக்கொல்லவருங்காளியேழு தையல்வடிவானதாய்வாழி
விண்டட்வும்பொழிற்கோஷ்டியின்மாதவன் மேவுந்திருமகளும்வா
எந்தைசோழீசர்நிதம்வாழிஜெக தீசனடியார்களும்வாழி [ழி
நந்தாதசெல்வமிகுந்தென்பனைசை நந்நகரமென்றென்றைக்கும்வா
கானைப்பதிக்கடவுள்வாழியென்றுங் கதிக்கும்விஸ்வகுலத்துதித்த
மானைப்பதிமுத்துகிர்ஷ்ணனன்பாக வழுத்துமிக்கும்மியும்வாழிய
[வே.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ பராசக்திசகாயம்.

# ஊசல்.

காப்பு.

காரணியுஞ்சோலைமலிபனசைமேவுங்
கமலமலர்க்கண்ணுடையதேவிமீதில்
ஏரணியுமூசலிசைத்தமிழைப்பாட
விருங்கயமாமுகசுரனைச்சிதைத்துவாகைத்
தாரணியும்புயசயிலன்மூன்றுமீநேத்ரன்
சண்முகவேள்சோதரன்பொற்சதங்கைப்பாதன்
சீரணிசெஞ்சடைக்கடவுள்சேயனான
தேசுவிநாயகன்பதத்தைச்சேவிப்போமே.

பரிதிநிகரகிமணியைவானமாக்கிப்
பரும்பவளந்தனைப்பதுமச்செகதியாக்கி
விரியொளிசெய்மரகதத்தைக்கண்டமாக்கி
மின்னுமெழிற்குமுதகமும்விளங்கத்தூக்கி
அரியநன்னீலத்தார்பட்டியலுந்தைத்தே
யம்பொன்னான்மயன்சமைத்தவூசன்மீது
கரியவன்மால்சோதரியேயாடீரூசல்
கண்ணுடையநாயகியே யாடீரூசல் (௧)

மதியொளிவச்சிரச்சிங்கக் கால்கள்நாட்டி
வளர்பதுமராகமதால்வளைகள்பூட்டிப்
புதியகோமேதகவத்யாளநீட்டிப்
பொருந்துமசுபாதமதிமணியார்காட்டி
சுதினசுத்தவாயாதிப்பொருத்தந்தன்னிற்
றுதிசெயுங்குபேரன்விமானத்தைநேராய்க்
கதிர்பரவச்சமைத்தமணியூசன்மீது
கண்ணுடையநாயகியே யாடீரூசல் (௨)

உவமையில்லாநாகபந்தங் கலசங்காட்டி
யுன்னதஞ்சேர்போதிகையுங் குடமுந்தீட்டி
நவமுளகோமேதகத்தைப் பலகைநாட்டி
நயமிகுமாணிக்கமதாற் கொடுங்கைசூட்டித்

தவறில்கையிற்றுளைவளைவியாளநீட்டித்
        தயங்குமொளிச்சப்ரமஞ்சமிசைசீமாட்டி
கவனசிங்கவாகனத்தா யாடீரூசல்
        கண்ணுடையநாயகியே யாடீரூசல் (௩)

வேதிகைதூக்கோடுகண்டம்விளங்கச்சேர்த்து
        வெண்டரளமணிக்கட்டுமாலைகோத்து
மீதில்வயிடூர்யமகாபத்மஞ்சூட்டி
        வெய்யவர்கள்கோடியெனஸ்தூபிநாட்டித்
தீதில்பொன்னாற்றொடுஞ்சங்கிலிகள்பூட்டித்
        திகழ்கொடிமேற்கட்டிகட்டுமூசன்மீது
காதுசண்டாசுரனைவென்றாயாடீரூசல்
        கண்ணுடையநாயகியேயாடீரூசல் (௪)

தேவர்களுமுனிவர்களும்பக்கம்சூழச்
        சித்தர்கள்கிந்நரரியக்கர்பாதந்தாழ
மாவனஜாசனனிந்த்ரன்மாலுங்கூட
        வலியதபோதனருடன்கந்திருவர்நாடப்
பாவலருமன்பரும்பல்லாண்டுபாடப்
        பகரரியநவரத்னவூசன்மீது
காவலரும்பனைசையெநதா யாடீரூசல்
        கண்ணுடையநாயகியேயாடீரூசல் (௫)

அண்டர்மனமகிழ்ந்துமலர்மாரிதூற
        அணிவிபஞ்சிநாரதனார்கானந்தேற
மண்டசனிதனைநிகர்துந்துபிகண்மீற
        மலியுமஷ்டதிக்கதிபர்வணக்கங்கூற
சண்டன்முதலவுணர்சமனுலகிலேறத்
        தரணியும்பருலகுமுய்யமஞ்சமேறிக்
கண்டனையமொழித்திருவேயாடீரூசல்
        கண்ணுடையநாயகியேயாடீரூசல் (௬)

பஞ்சகருவிகண்முழங்கச்சுதிகள்கூடப்
        பண்ணிசைகளமுதெனப்பாவலர்கள்பாட
வஞ்சவிழியரம்பையர்கணடனமாட
        மாமகள்பாமகள்சுபசோபனங்கள்பாட
அஞ்சமுதற்கொடிகளுமாகாயமூட
        அவுணர்குலமுடனடுங்கவதனம்வாடக்
கஞ்சமுகமகிழ்ந்தெனம்மையாடீரூசல்
        கண்ணுடையநாயகியேயாடீரூசல் (௭)

விந்தையுமாதவனுமொருவடந்தொட்டாட்ட
வேதனுங்கீர்வாணியுமோர்வடந்தொட்டாட்ட
இந்திரனுஞ்சசியுமொருவடந்தொட்டாட்ட
இரவியுமுழுமதியுமொருவடந்தொட்டாட்ட
மந்திரியும்புலவருமோர்வடந்தொட்டாட்ட
மாதிரமின்னுளுமொருவடந்தொட்டாட்டக்
கந்தமலர்க்கூந்தன்மின்னேயாடீரூசல்
கண்ணுடையநாயகியேயாடீரூசல் (அ)

சந்தமணிமுடியாடக்குழைகளாடத்
தலைப்பணிகளசைந்தாடத்தாமமாடச்
சுந்தரமேகலையாடத்தொடிகளாடச்
சுடர்விடுவெண்டரளமணித் தொடைகளாடத்
தந்தணையவிடையாடச்சதங்கையாடத்
தரணிமுதன்மூவுலகுஞ்சலியாதாடக்
கந்தமலர்முகத்தாயேயாடீரூசல்
கண்ணுடையநாயகியேயாடீரூசல் (கூ)

தேவர்முனிவரர்தவமுஞ்செழித்துவாழி
செல்வமிகுந்தென்பனைசைநகரம்வாழி
ஏவல்செய்யுமன்பர்களெந்நாளும்வாழி
யினியசைவசமயமென்றுமிசைந்துவாழி
பாவலனுமுத்துகிர்ஷ்ணனூசல்வாழி
பாரின்முப்பத்திரண்டறமும்பல்கிவாழி
காவலர்செங்கோல்வாழிசீவர்வாழி
கண்ணுமைநின்சன்னதியும்வாழிவாழி (ω)

ஊசல் முற்றுப்பெற்றது.

---

## ஸ்ரீ பராசக்திசகாயம்.

தோடையம் இராகம் நாட்டை தாளம் திஸ்ரம்.

---

க. ஜயகண்ணுடையதேவி ஜயபரமனுராவி
ஜயகருணைநிறைவாவி ஜயநன்மேதாவி

ஜயவமரர்பணிதல்லி ஜயவனஜவடிமெல்லி
ஜயவமுதநிகர்சொல்லி ஜயபுருவவில்லி (ஜயஜயா)

௨. மகிட குலசம்மாரி வரையிறைதருகுமாரி
மலர்மினார்பணிசூரி வரமருளுதாரி
குகனிபவதனனன்னை கோபாலன்மகிழ்பின்னை
குவலயமுதவுமுன்னை கோதிலாவென்னை (ஜயஜயா)

௩. தாலபுரநகர்வாசி தாயெனவுலகநேசி
கோலமுறுமிகுதேசி குறைவின்மகராசி
சீலவருள்விழிவேலி சேரடியர்க்கனுகூலி
சிங்கவாகனிநீலி தீரத்ரிசூலி (ஜயஜயா)

௪. நித்யமாய்வளர்தருணி நெடியசர்ப்பாபரணி
உத்தமநல்லன்பர்பணி யுயர்வனஜசரணி
சித்ரகுசகனகாத்ரி சிவன்மருவுசத்பாத்ரி
முத்துகிர்ஷ்ணன்போற்று முதல்விதிருநேத்ரி (ஜயஜயா)

---

மங்களம்-இராகம்-சுருட்டி-தாளம்-ஏகம்.

---

மங்களம் மங்களம் கண்ணம்மைக்கு மங்களம் மங்களம்

௧. செங்கமலத்திரு மங்கைகலைமங்கை
துங்கமுடன்பணி எங்கள்மாதாவுக்கு (மங்களம்)

சரணங்கள்.

௨. சத்திஜடாதரி நித்யசுமங்கலை
பத்தினியாய்வளர் உத்தமியன்னைக்கு (மங்களம்)

௩. அஷ்டதிக்குமுள்ள சிஷ்டர்களிஷ்டர்கள்
கஷ்டமகற்றிடுங் துஷ்டசம்மாரிக்கு (மங்களம்)

௪. நித்தியமும்பணி முத்துகிர்ஷ்ணன்செய்யும்
பத்தியறிந்துநற் புத்திதருவாட்கு (மங்களம்)

---

கோலாட்டம்-இராகம்-காபி-தாளம்-திருபுடை

---

நிருத்தஞ்செய்குவோம்மயிலே குயிலே
நேரிழையீர்நாமள்கோலாட்ட (நிருத்தம்)

அநுபல்லவி.

௧. விரித்ததாமரைபபெண் சேரும்பனசைநகர்
மேவிவளர்கண்ணுள்ள தேவிசன்னதிதனில் (நிருத்தம்)

சரணங்கள்.

௨. நாரணிஜகபரி பூரணிகண்ணுள்ள
நாச்சியார்திருவடி நாம்பணிந்து
வாரணிதரள மாலிகைதோடா
மணியுறும்வகைவகைப் பணிகள்மிகப்புனைந்து (நிருத்தம்)

௩. மல்லிகைகேதகை தாதகிசண்பகம்
மாதவிசெருந்தி மணமிகுந்த
முல்லைமலருமுகில் அனையகூந்தலில்
முடித்துக்கனநயனகள் படித்துப்பரதவித (நிருததம்)

௪. சேர்த்திடுசிந்துரத் திலதமுந்தீட்டிச்
செழுமணிச்சடையலங் காரமும்பூட்டிச்
சாஸ்திரவிதவபி நயவகைகாட்டித்
தகதகதிகிதிகி ததிங்கிணதோமென (நிருத்தம்)

௫. அம்புநிகரும்விழிக் கஞ்சனமெழுதி
யணிமணிக்கொந்தள வோலையும்பழுதில்
மொய்ம்புறுகோசு கட்டியசிமிக்கிகளும்
முருகுபொற்பாவிலி பெருகச்செவியிலிட்டு (நிருத்தம்)

௬. கந்தரந்தனிலே சரப்பணிமகர
கண்டிபதக்கமிகு பணிபூண்டு
சந்தனம்பனிநீர் புனுகுசவாது
தங்கமுடியனைய கொங்கைகளிலணிந்து (நிருத்தம்)

௭. கங்கணம்பாட்லா கரங்களிலணிந்து
கண்டைமற்சல்லா இடையினிற்புனைந்து
தங்கநவமணியொட் யாணமும்வரிந்து
தத்தரிகிடதகதகதரிகிடதக
தஜ்ஜெம்தகஜெம்ததிங்கிணதோமென (நிருத்தம்)

௮. சேயெனவேகண நாயகர்வேலனைச்
சிந்தைமகிழ்ந்துபெற்ற சுந்தரியே
தாயேயெங்களைக்காவெனவேண்டித்
தத்தித்திருகிடுதோம். தகதித்திருகிடுதோம்
திருகிடுதோம்திருகிடுதோம்
ததிங்கண்தோமென (நிருத்தம்)

கூ. அம்பிகைநாரணி யாரணிபூரணி
அன்னைவனஜமலர்ப் பொன்னடியை
நம்பினபேர்க்கெந்த நாளினுங்குறைவின்றி
நண்ணியசுகமருள் கண்ணுடையவள்முன்னே (நிருத்தம்)

ய. சூதனமுலைமட மாதரோயிவள்செயல்
தொல்லுலகிலெடுத்துச் சொல்லவென்ருல்
ஆதிசேடனுமுயர் வேதனுலேயுமாமோ
அவித்தரென்முளைக்கும் அதிசயமொன்றுசொல்லி (நிரு)

யக. நாடும்வளநகரும் நம்புமன்பர்களும்
நற்சுகமுடன்வாழ்க நாடோறும்
பாடியமுத்துகிர்ஷ்ண நாவலன்கோலாட்டப்
பதமும்வாழ்கச்செங்கோல்
நிதமும்வாழ்கவென்று (நிருத்தம்)

## வேறுகோலாட்டம்.

இராகம்-முகாரி-தாளம்-திரிபுடை.

க. நங்கையர்சிலர்கூடிக்கண்ணுள்ள நாச்சியார்கொலுநாடிப் [டி
பங்கையமலர்நிகர்பாதமதைப்பணிந்து பன்மணிக்கோல்தே

உ. சங்கரிபுகழ்பாடிப்பரதத்தின் சதிமுறைநடமாடித் [ோ
திங்களைநிகர்முகமங்கையர்மகிழ்வுடன் சேர்ந்துகோலாடின

ங. தேசுறுதிரிசூலிஇமவனை செல்விமெய்யுடனீலி
தாசரனுதினமும்பூஜனைசெயவரந் தந்திடுமனுகூலி

ச. அஞ்சனநிகர்கேசிமலர்மின்னூர் அடிபணியுந்தேசி
கஞ்சன்முதல்விபுதர்செஞ்சரண் பணிந்திடக்காத்திடுமகராசி

ரு. மங்களகல்யாணி அபயவரதமிலங்குபாணி [நவகோணி
அங்கசனுலகினில்ஆண்மைசெலுத்தும்வகை யருள்செய்யும்

சா. சண்டனுடலைவாட்டியுலகெங்குந் தன்புகழ்க்கொடிநாட்டி
அண்டரரசனயன்விண்டுமனமகிழ அரசுதவும்பிராட்டி

எ. தானவசம்மாரிசங்கரி சாமளைகவுமாரி
தீனதயாபரியடலரிவாகனி சிற்பராரணவீரி

அ. உத்தமிசிவகாமிசிவபிரான் ஒருவன்மகிழும்வாமி [ராமி
பத்தியுடனேயன்பன்முத்துகிர்ஷ்ணனிதம் பணிந்திடும்அபி

## (மேற்படி வேறு.)

இராகம்-கரகரப்பிரியை-தாளம்-மிஸ்ரம்.

க. கோலுகோலுகோலுகோலு கோலுகோலெனெ
கோலையாடமாதர்வாருமோடியாகவே
வாலமாதர்கோலமாகவந்துகூடுவீர்
வந்துவந்துகந்தவாசமாலைசூடுவீர்

உ. கோதிலாதகீதராகமாலைபாடுவீர்
கோலடித்துநீர்நடித்துக்கூடியாடுவீர்
மாதுமார்பன்வேதமோதுமால்சகோதரி
வையகங்களுய்யுமாறு செய்யுமாதரி

ந. சண்டனுவியுண்டுகண்டஅண்டர்நாயகி
சாமவேதகானமால்செயீசனுயகி
அண்டுமன்பர்தொண்டுகண்டுமண்டுநோயினை
அன்றுவென்றுநன்றிதென்றுநின்றதூயனே

ச. முந்துதந்திகந்தவேளுமைந்தாகியே
முன்புவந்திடுங்கனந்தரும்வராகியே
சந்தகந்தமுங்கொள்கும்பகொங்கைமாமினே
சஙகமும்பயந்துனுங்களங்கொள்பூமினே

ரு. சித்தசுத்தவுத்தமர்க்குதிக்கும்நாரணி
செங்கைதங்குதுங்கசூலமிலகுபூரணி
முத்துகிர்ஷ்ணனித்தமுந்துதிக்குமன்னையே
மூதராவிலேதுயின்றநாதர்பின்னையே.

## நலுங்கு.

இராகம்கேதாரம்தாளம்ஆதி

க. திருமருவும்பனைசைநகர்ச் செல்விகண்ணுத்தாய்க்குமிக
அருமையுடன்நலுங்குசெய்ய ஐங்கரன்சேவடிதுணையே

உ. இந்திரன்மாலந்தணனர் இமையவர்மாதவரியக்கர்
கந்திருவர்பணியரசர் காரிகைமாருடன்சூழ

௩. அன்பர்களுந் துதிபுரிய  அணிமணிச்சிங்காசனத்தில்
இன்பமுடன் மூவுலகும்  ஈன்றிரட்சித்திடுமாதா

௪. கானவிசைமுழங்கிடவே  கண்ணுடையாள்கொலுவிரு [ந்தாள்
தானரம்பைமாதர்சிலர்  தனிநலுங்குசெயவெழுந்தார்

௫. அரைத்தமஞ்சள்பருப்புடனே  அட்சதையும்அப்பளமும்
நிறைத்ததங்கத்தட்டமதில்  நிறையவைத்துநலுங்குசெய் [தார்

௬. அந்தரியேஜயஜயா  ஆதிசக்தீஜயஜயா
சுந்தரியேஜயஜயா  தாயவளேஜயஜயா

௭. தாளின்மணிக்கழலுமிட்டுத்  தனிச்சூலக்காத்தொடஷ்ட
காளிவடிவாயுதித்த  காரணியேஜயஜயா

௮. அன்றுசண்டாசுரனுடலை  யலகைகொடிபருந்தருந்த
வென்றுவெற்றிமாலைபுனை  வீரசக்திஜயஜயா

௯. சக்திசடாதரிவிமலி  தற்பரையேசிற்பரையே
முத்துகிர்ஷ்ணன் துதிபுரியும்  முதன்மணியேஜயஜயா

---

## லாலி.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு-கண்ணிகள்.

௧. லாலிலாலம்மலாலி பர்வதராஜசுகுமாரிலாலி
நீலநிறவன்னைலாலிகடல்வண்ண நிமலனுடன்னைலாலி

௨. சங்கரிவராகிநீலிகவுமாரி தற்பரானந்திசூலி
சிங்கவாகனிநாரணிசாமளா தேவிமாதரிபூரணி

௩. சத்திமாதரிசுந்தரிமாகாளி சாமுண்டிசிவையந்தரி
நித்யமங்களகல்யாணி மாதங்கிநிமலைகாரணித்ரிகோணி

௪. வானவர்கள்துதிசெய்சரணி சிவபிரான்மனமகிழவந்ததருணி
தானவர்கள்குலநாசனி யினியவருள்தங்குமுயர்திரிலோசனி

௫. முத்தொழினடத்துமுதல்வி வழுதிபுரிமுதிர்தவத்துற்றபுத [ல்வி
முத்துகிர்ஷ்ணன்பாடிடும்கவிமாலை மொய்ம்பிலணியாய்நாடி [டும்.

## (மேற்படி வேறு.)

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்,ஏகம்-கண்ணிகள்

க. அன்னேலாலிகண்ணன்பின்னேலாலி ஜகம்
அத்தனேயும்பெற்றருளுஞ்சக்திலாலி

உ. கன்னன்மொழியன்னநடைப்பொன்னேலாலி தந்தி,
கந்தனேயுமைந்தனெனத் தந்தாய்லாலி

ங. ஆதிசிவன்பாதிகொண்டமாதேலாலி புவி
அண்டமுமகண்டமெங்குங் கண்டாய்லாலி

ச. வேதநிதமோதுமுயர் கோதைலாலி மூல
வித்தெனமுளைத்துவந்த நித்யைலாலி

ரு. சண்டனுயிருண்டிடுசாமுண்டிலாலி யவு
தாரியுபகாரிகவுமாரிலாலி

சு. அண்டர்துதிகொண்டருளுந்தண்டிலாலி திகழ்
ஆதிமதிபாதியணிஜோதிலாலி

எ. அந்தமெனவிந்தைதபணியெந்தைலாலி யன்பர்
அல்லல்வினேவெல்லுமுயர் தல்லிலாலி

அ. முந்தவனைதந்தவுயர்கந்திலாலி அன்பன்
முத்துகிர்ஷ்ணனித்தம்பணி சக்திலாலி

## சோபானே.

இராகம்-தேவகாந்தாரி-தாளம்-ஆதி.

சோபானேசோபனமே சுந்தரிகண்ணுள்ள
அந்தரியன்னேக்கு சோபானே

க. பாபநிவாரணி பார்வதிபூரணி
தாபமகற்றும்ஜெக தல்விநற்செல்விக்கு (சோ)

உ. நாரணன்சோதரி பூரணிமாதரி
ஆரணந்தினமோதும் காரணமாதுக்கு (சோ)

ங. இந்திரனயனிதம் வந்துவனஜபதம்
வந்தனேபுரிதேவி சந்திரவேணிக்கு (சோ)

ச. முத்துகிர்ஷ்ணன்கவியால் பத்தியுடனேயனு
நித்யமுந்துதிசெய்யும் உத்தமிசத்திக்கு (சோ)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-திஸ்ரம்.

பல்லவி.

தஞ்சம்நீயனையே தடுத்தாளெனையே

அநுபல்லவி.

கஞ்சமின்னாள் பயில்பனைசைவாழ்
கண்ணுடையதண்ணமுதே பெண்ணரசியே (தஞ்சம்நீ)

சரணங்கள்.

௧. கடைக்கண்ணார்பாராப் கலிமுற்றுந்தீராய்
அடைக்கலநான் ஆதரித்திடுவாய்
அன்னையும்நீ முன்னவனீ பின்னைவேறிலை (தஞ்சம்)

௨. வளைவில்லிமனையே மணிவண்ணன்பினையே
கரிமுகனைக் கந்தனையுதவுங்
காரணியேபூரணியே நாரணியென்றும் (தஞ்சம்நீ)

௩. பத்திசெய்தறியேன் பணிவகைகுறியேன்
உத்தமியே முத்துகிருஷ்ணனையாள்
ஓங்காரிரீங்காரி நீங்காதெற்கு (தஞ்சம்நீ)

---

இராகம்-யமுனாகல்யாணி-தாளம்-மிஸ்ரம்.

பல்லவி.

தாயேநின்பதமலர்சரணம் எந்தன்
தாபமகற்றியாள இதுநல்லதருணம்

அநுபல்லவி.

மாயனயன்குலிசன் தூயபுலவர்களும்
வந்துபணிபனைசைச் சுந்தரியேகண்ணுள்ள (தாயே)

சரணங்கள்.

௧. பண்டுபகடுமுகன் கண்டதுண்டமாய்விழப்
பாணியயில்விடுத்துச் சேனுலகைப்புரந்த (தாயே)

௨. நம்புமடியார்பவத் துன்பமகற்றியென்றும்
நன்மையுதவுந்தெய்வம் பின்னைவேறிலையே (தாயே)

௩. நித்யமுமுனதுப தத்தைமறந்திடாத
முத்துகிருஷ்ணனையாளும் சக்தியேகண்ணுடைய (தாயே)

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஏகம்.

பல்லவி.

தாயேநினதுபதமேகதி கண்ணுத்தாயேநினதுபதமேகதி

அனுபல்லவி.

மாயமகிடமுகன் மாயக்கிளைகளொடும் (தாயே)
வீயப்புலவர்துடர் தேயப்பொருதுங்கண்ணுத்

சரணங்கள்.

க. கரிமுகன்குகனருமை யன்னையே
திருமருமன்மனமகிழ் பின்னையே
கிரியைத்தனுவளைத்துத் திரிபுரத்தையெரித்த
பரமன்மனைவியெனுங் கருணைக்கடலேஎந்தன் (தாயே)

உ. கவலைவஞ்சனைபிணிகள் சேரினும்
புவனமன்னவர்கள்பகை நேரினும்
குவலயவிழியுநய மொழியுமுனதமிர்த
குணமுங்கனமுமனைட் சணமுமறவேனம்மா (தாயே)

ரு. பனைசைநகர்வளர்தெய்வ அன்னமே
வனஜமங்கையர்பணியுஞ் சொர்னமே
பனிமலரடியையனு தினமுந்துதிபுரிந்து [யே)
பக்தியுடன்பணியும் முத்துகிர்ஷ்ணனையாளும் (தா

இராகம்-காபி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

தாயேநீயேசேயேற்கருள்புரி தாயே

அநுபல்லமி.

தூயோயிமவனை சேயாய்வளர்கண்ணுத் (தாயே)

சரணங்கள்.

க. அன்புசெய்யடியவர் துன்பமகற்றியென்றும்
இன்பவரமுதமும் அம்பிகையேயெந்தன் (தாயே)

உ. ஆரணிகலியுக காரணிசிவைபரி
பூரணிகவுமாரி நாரணியேபெற்ற (தாயே)

ரு. சத்தியேநினதடி நித்தியமும்பணியும்
முத்துகிர்ஷ்ணனையாளும் உத்தமியேகருணைத் (தாயே)

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதரித்திடுவாயன்னையே எப்போதுமென்னை

அனுபல்லவி.

மாதிரம்புகழ்பனைசை மாநகர்க்கண்ணுடையாளே (ஆதரி)

சரணங்கள்.

க. திக்குனையல்லால்வேறில்லையே யுலகமதில்
தக்கமகிடாசுரனைத் தாரணியில்வீட்டுந்தேவி ஆதரி

உ. இரக்கமில்லாவன்சிலையோ உனதுமனம்
வரமுதவிமன வருத்தமகற்றியென்றும் (ஆதரி

ந. சத்திகவுமாரிகௌரி சாம்பவிகாளி [ஆதரி)
முத்துகிர்ஷ்ணன்பணிஜெகன் மோகினிகண்ணுடையாளே

---

இராகம்-சங்கராபரணம்-தாளம்-திஸ்ரம்.

பல்லவி.

அன்னையேநின்னடிதன்னையேயுன்னிய என்னைநீகாத்தருள்வாய்

அனுபல்லவி.

மன்னியபனைசை நன்னகர்க்கண்ணுள்ள
மாதேமிகுசூதேநினை யாதேததியீதேஜக (தன்)

சரணங்கள்.

க. ஆதிபசுபதிபாதியிடம்பெற்ற ஜோதிசுகசொரூபி
வாதினடம்பத்தி மீதுபுரிசித்தி
மயிலேமொழிகுயிலேவிழி அயிலேநிகர்லயிலாகிய (அன்)

உ. அண்டவாதைசெய்சண்டன்முடியினைக் கண்டனஞ்செய்
தொண்டர்துயரினைக் கண்டகலச்செய்யும் [கவுரி
சூலிமலைநீலியனு கூலிமணிமோலியணி (அன்,

ந. உத்தமிதென்பனசைத்தலமேவிய சத்திதிரிநயனி
பத்தியுடனித முத்துகிர்ஷ்ணன்பணி
பரமேஸ்வரிகருணாகரி அரிசோதரிபரிபூரணி (அன்)

---

## எச்சரீகை

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-திஸ்ரம்.

கண்ணிகள்.

க. தினமேவியபனசாபுரித் திருவேகர்பதருவே
வனமாமலர்புனைகார்குழல் மயிலேயெச்சரீகை.

உ. அன்னைபசும்பொன்னேயுய ரணிசேர்நவமணியே
தன்னேரிலாமின்னேகண்ணுத் தாயேயெச்சரீகை.

ந. இனிதாகியகனியேபுவி யீன்றாய்புகழ்சான்றாய்
தனியேபதுமினியேகண்ணுத் தாயேயெச்சரீகை.

ச. வானோர்புகழ்தேனேகுணவனையேபராபனையே
மானேர்விழிபானேர்மொழி மயிலேயெச்சரீகை.

ரு. சத்தேயுயர்சித்தேகண்ணுத் தாயேவனசேயே
முத்தேமூலவித்தேமுழு முதலேயெச்சரீகை.

சு. அனமேமயிலினமேயுய ரன்னேயரன்மனையே
கனமேவியதனமேமுதிர் கனியேயெச்சரீகை

எ. பூமாமகள்நாமாமகள் போற்றிப்புகழ்ந்தேத்தும்
தேமேவியபூமென்குழற் றிருவேயெச்சரீகை.

அ. மிகையாமுடன்மகிடாசுரன் வீழ்கப்புவிவாழ்க
பகையோடிடும்வகைமாய்த்திடு பரையேயெச்சரீகை.

கூ. தாயேயுமைநீயேசர்வசாட்சிகமலாட்சி
மாயாவரநாயேற்கருண் மருந்தேயெச்சரீகை.

ம. வந்தேபணியுந்தாசர்க்கு வரமீந்திடுந்தருவே
செந்தாமரையிந்தாமுகத் திருவேயெச்சரீகை.

கக. துடிகோளரிபிடிவேலுடன் கொடியேயன்விடையாய்
முடிமால்வரைகுடமாமுலை முதலேயெச்சரீகை.

கஉ. கந்தருயர்தந்திமுகக் கணநாதனையருமை
மைந்தரெனத்தந்தஜெகன் மாதேயெச்சரீகை.

கந. நாலாகியமேலாமறை நாடும்பிறைசூடும்
காலாந்தகன்மாலாகியகனியேயெச்சரீகை.

கச. விதிநாகமன்மதசூதனன் விண்ணோர்தினநண்ணித்
துதிசெய்பசுபதிபால்வளர் ஜோதீயெச்சரீகை.

கரு. பத்திதருசத்திமுகம் பார்த்துக்கலிதீர்த்து
முத்துகிர்ஷ்ணனைக்காத்திடு முதல்வீயெச்சரீகை.

## கட்டியம்.

### அகவல்.

திருமகள்கலைமகள் சேவைசெய்மலைமகள்
குருமணிமுடியாள்கொண்டலாமுடியாள்
பாலநற்சிலையாள்கோலவன்முலையாள்
சேலெனும்விழியாள்பாலெனுமொழியாள்
பணிமணிக்குழையாள் அணிகதிரிழையாள்
குமிழெனுமூக்காள் அமிழ்தெனும்வாக்காள்
கஞ்சனக்கனத்தாள் அஞ்சிடாமனத்தாள்
ஆலனவயிருள்வான் மணியெயிருள்
அபயஸ்தமுடையாள் அன்னமென்னடையாள்
மூவிலைச்சூலிதாவின்மெய்ந்நீலி
மெய்ச்சிங்கவாகனியிச்செகன்மோகனி
மகிடசங்காரிதகைகொள்சிங்காரி
சுயம்பிரகாசிஜயமகராசி
மறைபணிதருணிஅறைகழற்சரணி
மதியணிசடையான்மான்மழுவிடையான்
விதிபணிபுராரிவிரும்புநற்பாரி
சங்கணிசெங்கைச்செங்கண்மால்தங்கை
அயிற்கரக்குகனைஅத்திமாமுகனைச்
சேயெனப்பயந்தாள்தாயெனவுயர்ந்தாள்
பனைசைமாநகராள்படர்வசைபகராள்
அலகிலாக்கல்வி மலைறுஞ்செல்வி
அகிலாண்டகோடிபிர்ம்மாண்டநாயகி

## மேற்படி வசனம்.

ராஜராஜேஸ்வரி மகிடாசுரசம்மாரி சுவர்க்க மத்ய பாதாள மென்னும் திரிலோகமாகிய மூன்றுமக்களையும் பெற்றுவளர்த்த லோகமாதா நிகிலலோகங்களும் அசஞ்சலமாய் உஜ்ஜீவிக்கும்பொ

ருட்டு அஷ்டகாளி மூர்த்தமாகி ஞானக்கண்பெற்று கண்ணுடையவளென்னுந் திருநாமந்தரித்து நரமாமிசபட்சணியும் தேவகண்டகனும் அசுரகுலவல்லவனும் மாயாசொரூபியுமாகிய சண்டாசுரனை சம்ஹாரம்பண்ணி வெற்றிமாலைபூண்ட தாலபுரவாசியாகிய ஸ்ரீமத் கண்ணுடைய நாயகி இன்று சபாமணிமண்டபத்துக்கு யெழுந்தருளி நவரத்ன சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்து நேத்திரானந்தமான பரதகேளிக்கையும் பார்த்து சகல அடியார்களும் தனது திருவுருவத்தைக் கண்டுதரிசிக்கும்படி அலங்காரதோரண வீதியில் பவனிவருவதால் பத்திமிகுத்த அன்பர்கள் மனோவாக்குக் காயங்களாலே நினைத்தும் துதித்தும் வணங்கியும் இம்மை மறுமைப்பயனை அடையுங்கள் பராக்கு எச்சரிகை.

—— * ——

## தாலாட்டு.

இராகம்-நீலாம்பரி.

க. சீர்பூத்ததென்பனைசைச் செல்விமகாமாயையெழு
பார்பூத்தகண்ணுடைய பைங்கிளியேகண்வளராய்

உ. இம்பரோதொட்டி லிரவிகதிர்விளக்காய்
உம்பர்விதானமதாய் ஓங்குசப்ரமஞ்சமிசை

௩. அகிலபுவனமுத லண்டமும்பாதாளம்
சகலமுந்தானாகிநின்ற சத்தியேகண்வளராய்

௪. பண்டுசண்டாசூரன் பலமாயவல்லுருவங்
கொண்டவனைவீட்டுங் குருமணியேகண்வளராய்

௫. மூவுலகாமக்கள்பெற்று முத்தனமோடேமதுரைக்
காவலர்க்குப்பெண்ணாகிக் காததவளேகண்வளராய்

௬. சங்கையில்லாலோகந் தனைப்பயின்றுந்தாழாத
கொங்கையெழில்பெற்ற குமரியேகண்வளராய்

௭. மூவுலகுளோர்பணிய மூசுகந்தர்வாளிசையும்
நாவலரும்பாடிநிற்க நாயகியேகண்வளராய்

௮. துஷ்டசம்மாரி சுகுணநித்யகல்யாணி
அஷ்டமூர்த்தத்தமர்ந்த அன்னையேகண்வளராய்

௯. அண்டருலகத்தமுதே அன்னமேபைங்கிளியே
கண்டேநவரசம்மே கனியேநீகண்வளராய்

௰. சத்திசடாதாரீ சாம்பவியுமாதேவி
முத்துகிர்ஷ்ணன்போற்று முதல்வியேகண்வளராய்

---

இராகம்-பூபாளம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

---

க. அன்னையேபுவிதன்னையேயினி யாதரிப்பவரோது நீ
தன்னிகரிலாஅன்னமேபுவி தாங்கவேதுயில்நீங்குவாய்

உ. தஞ்சமாகியேயஞ்சலென்றருள் தந்துகாத்திடுஞ்சுந்தரீ
மஞ்சமீதிசைதுஞ்சனீங்கியே வந்திடாய்சுகந்தந்திடாய்

௩. வாரிஜங்களும்காரிரங்கமு மலர்ந்தவொலியொடுபுலர்ந்தவே
சீரிலங்கியபார்புரந்திடச் செழுந்தகாயனையெழுந்திராய்

௪. எண்ணுமாதவன்விண்ணின்மீதுவந் தின்பமெய்தினனன்பனே
கண்ணமேதுதிபண்ணுமன்பனைக் காக்கநீதுயில்னீக்குவாய்

---

(இது) மேற்படி முத்துகிர்ஷ்ண வுபாத்தியாயர் குருவாகிய வரகவி, ம-ா-ா-ஸ்ரீ, சொர்னபாரதியளியற்றியது.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவேசமயங்கிர்பைபாரம்மா சித்தம்
இரங்கியன்பர்கலியைத்தீரம்மா

அநுபல்லவி.

சதுர்மறைப் பொருளேதென்
பனைசைக் கண்ணுள்ளசிவ
சங்கரீபுவி யெங்குமனிதர்க
லங்கிருர்மழை பொங்கமாய்வர (இதுவே)

சரணங்கள்.

உ. பாரிற்செய்தபயிர்கள் வாடுதேயதைப்
பார்த்துமனவருத்தம் நாடுதே
காரிருளாய்வந்துகூடுதே பொன்ன
காலம்வருஷியாம லோடுதே
நாரணியேயுனது கடைக்கண்ணாற்பார்த்திந்த

நாவலோகம்பெருந் தீவுதனினிறைந்த
சீருஞ்செழிக்கமழை பெய்ததனிற்சிறந்த
செல்வம்விளங்கும்படி செய்குவாயேயுந்தன்
சித்தம்வைத்தும லைத்துவெங்கண்ம
னத்தையின்பஞ்செய் பக்தரட்சகி (இதுவே)

௫. அடிமைசொல்செவிகேட்க வில்லையாநாங்கள்
அனுதினம்பணிவது கல்லையா
கொடுமைசெய்மிடித்துய ரெல்லையாநவக்
கோள்களிப்படிச்செய்த தொல்லையா
படுதேபயிர்களெல்லாம் பரிவாயருட்கண்பாரு
பஞ்சநாடாய்விலை குறைந்துபோகுதேயாறு
நடுவேகைவிட்டகதை யாச்சேசகனகமேரு
நகமண்டினகாகம்பொன் னிறமல்லவொவுன்னிரு
நளினவடிகதி பழியுன்மேன்மழை
பொழியவுஞ்செந்நெல் விளையவும்மிக (இதுவே)

௬. பாதிமதியணிந்தவேணியே சொர்ன
பிரதிபணியுந்த் ரிகோணியே
ஜோதிமணிநிறைந்தபூணியே மைடா
சுரசம்மாரிசூல பாணியே
வாதில்த்தில்லையிலாடும் தாயேகண்ணுடையாளே
வாழுமுயிர்கட்கெல்லாந் தஞ்சமுனது தாளே
வேதம்பணியுநீயேவருணனை யே யிந்நாளே
மிகமழைபொழியவேசெய்வா யிதுநல்வேளை
மின்னேகதியிலைச் சொன்னேனுனையலால்
அன்னையேபுவி தன்னைக்காத்திட (இதுவே)

முற்றும்.

ஹரிஓம்.

ஸ்ரீமதேராமானுஜாயநமா.

## சோலைமலையழகரென்னும் சுந்தரராஜப் பெருமாள்பேரில்,

# திருப்பதிகம்.

பரிதிசதகோடியெனவெயில்விரியுமணிபல
பதித்திலகும்மணிமகுடமும்
பண்ணவர்களிருவர்பயிலிசைபருகுசெவியினிற்
பருமிருமணிக்குழைகளும்
வரியருட்செங்கமலநயனமும்பூவைநிகர்
வதனவிம்பத்தினழகும்
வளருமிளமதிநுதலிலிலகுதிருநாமமுடன்
வண்டுளபமாலைமார்பும்
அரியடக்குந்தவளசங்கமொடுசக்கரமு
மங்கைகளிரண்டின்மின்ன
வம்புயத்திருமங்கையொடுகெருடன்மீதுகாத்
தருளவடியேன்முன்வருவாய்
சுருதிமுதலாகமமுமேழுலகும்வந்துபணி
துய்யபாதாவினோதா
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (க)

மாதவாகேசவாநாராயணகொண்டல்
வண்ணவனந்தசயன
வசுதேவநந்தனதாமோதராகருட
வாகனதிரிவிக்ரமா
சிதராகமலநயனபடியளந்தவா
தேவகிசுதாமுகுந்தா
திகழுவணகேதனபஞ்சாயுதாகண
தேவதேவாவச்சுதா
வேதன்மதனைச்சுதரெனத்தந்தநாதகோ
விந்தாஜகத்ரட்சகா

வேணுகானசங்கசக்ரஹஸ்தாபதித
பாவனவிமலாமது
சூதனவனதரட்சகவெனத்தினமுந்
துதிக்குமெழியேற்கருள்செய்வாய்
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (உ)

பண்டொருகராசலத்திற்கராசலமதைப்
பற்றியீர்க்கப்பயந்து
பாராதிமூலமேயெனமுன்புவந்தெமன்
பதிமுதலேசேரவீட்டி
விண்டலத்தரசுவேழத்திநுக்குதவினய்
வேதமுடிவானகீதை
விஜயனுக்கருள்செய்தாயைவர்கொடிதுகில்வறுமை
விலகினய்கரியசிலையை
வண்டனையகுழன்மாதெனச்செய்தாய்பிரமற்கு
மறையளித்தாய்வீடணன்
மாளாதுவாழ்கவைத்தாய்புவியிலுயிரெலாம்
வாடிடாதுணவுதந்தாய்
தொண்டனென்முன்வந்துகேட்டவரமுதவுவது
சொல்வாயுனக்கருமையோ
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (௩)

ஆதியேயண்டபகிரண்டங்களெண்டிசை
யடங்கலுந்தானனவா
வப்பனேயென்றியான்செப்புமொழியுனதுசெவி
யதனிலேலாததென்னே
வேதியன்வலாரிவிண்ணவருரகர்முனிவர்விஞ்
சையரோனையடியார்களும்
மேவியவரவர்குறையுரைத்திடுஞ்சமயமோ
மிகுதிருவிழாச்சத்தமோ
மாதிருவரங்கமொடுபாற்கடலெனக்கண்
வளர்ந்திருக்குந்தருணமோ
மவுனயோகத்திருக்கின்றததியோநின்
மலைக்கிவடம்வெகுதூரமோ
சூதனுகிச்சுயோதனனதிபலனைத்
துணித்தைவருக்கருள்செயுஞ்
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (௪)

செய்யகனகத்தாலமைத்திரவியெனவொளி
செறிந்திடுந்திருவிருப்புஞ்
செழுமணிபதித்திலகுமர்த்தமண்டபமுமெழில்
சேர்மையமண்டபமுநீள்
பையராமணியுறுமகாமண்டபஞ்சுற்று
பைம்பொன்மண்டபநிறைகளும்
பளிக்கறைகளும்பொன்றுசஸ்தம்பமுடனம்
பரந்தொடுவிமானங்களும்
வெய்யவன்கதிர்மழுங்கச்செய்தூவிகளிலகு
மின்னுகோபுரமிகுதியும்
மேவுபதினெட்டான்படிக்கறுப்பன்வாசல்
வீற்றிருக்கும்பெருமையுந்
துய்யசுரரேழுலகும்வந்துபணிமகிமையுஞ்
சொல்லுதற்கெளிதாகுமோ
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (௫)

உம்பர்துயர்தீர்த்திடத்தயரதன்சேயென
வயோத்திவந்திடுகடவுணீ
யுந்தியிலுதித்தவர்க்காரணமளிக்கவென்
றுயர்மச்சமானவனுநீ
கம்பநடுவிற்றோன்றிநின்னையிகழ்பொன்னனைக்
காயவருநரசிம்மநீ
காண்டிபன்சாரதியெனத்தோன்றியமனைக்
கடந்தரசளித்தவனுநீ
யம்பரங்களைபிறளுமிறுதிகாலத்தாதி
யரிவடிவமானவனுநீ
யன்பன்மாவலியிடஞ்சென்றுதிரிவிக்கிரம
னாகவருகின்றவனுநீ
துன்பமணுகாமலடியேனையாடந்தைநீ
சுற்றநீயாவுநீயே
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (௬)

அரிகரீயோன்னமோநாராயணாவென்றுன்
அட்டாட்சரத்தைநிதமு
மகத்திற்றியானித்திருக்கும்படியேனை நீ
யாட்கொளவெழுந்துவாரா
திருந்தவிதமென்னநீவழிநடப்பதில்வனஜ
விணையடிகணோகுமென்று

லெந்நாளும்வாசலிற்காத்திருக்குங்கருட
னெங்கேபோனனுமனெங்கே
வருகவுஞ்சென்றிடவும்வழிதெரியவில்லையா
வழிப்பயமுனக்குமுண்டா
வாதுசெய்திடலாகுமாபெற்றதந்தைதாய்
மகவுக்கிரங்குவதுபோற்
றுரிதம்வராமல்வந்தெனையாள்வதுன்கடன்
ஜோதியேகருணைமுகிலே
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (எ)

தன்னையுணர்வுற்றின்பதுன்பமுஞ்சமமென்று
தானனமேலவர்பதத்
தாமரைதனைப்பணிந்தறிகிலேன்சற்குரு
தனதுமறைசெவிகேட்கிலேன்
பின்னையுஞ்செந்தமிழினூல்களிற்பேசிடும்
பெருமையையுமின்னமறியேன்
பேருலகிலகிலாண்டகோடிபிர்ம்மாண்டநா
யகனெனப்பேசுமுனது
மன்னுபுகழ்தனையுநாவாற்றுதித்தறியாத
வறியனுனுமுந்தன்
மலர்ப்பதங்கதியென்றடைந்தபோதாள்வதோ
வன்கண்மைசெய்வதோசொல்
துன்னுபுளினர்கள்பசுந்தேனைவானவருணச்
சொல்லியன்பாகநீட்டுஞ்
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (அ)

ஐயநீமேவுதிருவாலயம்வைகுந்த
மாகுநின்றீர்த்தமகிமை
யாரறிகுவார்சவுந்தரவல்லிநாச்சியா
ருகில்வளரும்பெருமையுஞ்
செய்யவாழ்வாராதியென்றுமுன்றிற்காத்
திருந்துபணிவிடைசெயன்புந்
தேவர்முனிவரர்சித்தருரகர்விஞ்சையரிந்
திரன்வந்துபணிபுதுமையும்
வையகந்தனிலுள்ளவன்பர்வந்துன்கோயில்
வாசனிறையுங்கூட்டமும்
மனமகிழ்ந்தவரவர்கள்கேட்டவரமுதவுநின்
மகிமையுஞ்சொல்லவெளிதோ

துய்யசாட்சாத்காரவஸ்துநிலைகண்டிடுந்
துறவோர்கண்மிகவசிக்குஞ்
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (கூ)

மாதவாவுந்தனிருபாதமலரைத்தினமு
மறவாதநற்பத்திதா
மருவுநின்னடியார்கள்சேர்க்கையைவிடாமலவர்
மனமகிழுநல்லுறவுதா
சீதகமலத்திருமினென்மனையைநீங்கா
திருக்கும்ப்ரபலவாழ்வுதா
சிவயோகிகளைநோக்கிலவர்கண்மகிழ்பணிவிடைகள்
செய்துதவுநல்லமதிதா
ஏதமில்லாநூலகள்கற்றுணருமறிவுதா
வேவல்வஞ்சனைசூனிய
மெப்பிணியுமென்னையண்டாமலேயிகமீதி
லினியசுகமெந்தையேதா
சூதை நாணும்பயோதரவாரிஜப்பெண்
டுணைப்புயந்தழுவுகணவா
சூதமாமலகமகில்பூகமால்பலவுமிகு
சோலைமாமலையழகனே (௧0)

முற்றும்.

---

# போற்றிப்பதிகம்.

——*——

ஆதியாய்ப்பூதவடிவெல்லாந்தானு
யணுவினுக்குமணுவாகிநிறைந்தாய்போற்றி
சோதியாய்ச்சுடரொளியாயுலகமியாவுந்
தோற்றுவித்துக்காத்துவருந்தூயாபோற்றி
கோதில்லாநற்கருணைக்கடலேபோற்றி
குருமணியேபசுங்கனகக் குன்றேபோற்றி
மாதிரத்தினுயர்சோலைமலையிலென்றும்
வளர்முகிலையெனையாளவருவாய்போற்றி (க)

பொன்னனைவீட்டிடப்பிரகலாதற்காகப்
பொற்றூணிலரிவடிவாயுதித்தாய்போற்றி
பன்னகமீதினில்வனஜத்திருமாதோடும்
பாலாழிதனிற்றுயிலும்பரனேபோற்றி
அன்னவூர்தியைப்பயின்றிவ்வுலகிரேழு
மருணைக்காற்காத்தருளும்மாலாபோற்றி
மன்னுதருமிகுஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயென்னையாளவருவாய்போற்றி (௨)

ஆரணங்கள்போற்றுமலர்ச்சரணாபோற்றி
யாம்பன்முன்புவந்துகதியளித்தாய்போற்றி
நாரணனேபோற்றியருட்கடலேபோற்றி
நறுந்துளபமாலையணிமருமாபோற்றி
காரணனேபோற்றிநாரணனேபோற்றி
கருங்கடல்வண்ணாகமலக்கண்ணாபோற்றி
வாரணங்கண்மிகுஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயென்னையாளவருவாய்போற்றி (௩)

மாவலிபாற்சென்றுபடியளந்தாய்போற்றி
மன்னுயிர்க்காப்படியளந்தமாலேபோற்றி
தேவதேவாபோற்றிதவளசங்கந்
திகிரியணிசெங்கமலக்கரத்தாய்போற்றி
நாவாலெத்தினமுமுந்தனாமந்தன்னை
நவிலடியார்க்கருள்புரியுநாதாபோற்றி
மாவளஞ்சேருஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயென்னையாளவருவாய்போற்றி (௪)

தேகமனித்தியமென்னுமறிஞர்நெஞ்சந்
திருவரங்காயமர்ந்துவளர்தேவேபோற்றி
சூகரமாயவதரித்தவிமலாபோற்றி
சுத்தனேநித்தியனேதூயாபோற்றி
மேகமதைநிகர்த்திடுமேனியனேபோற்றி
விண்ணவர்கள்வணங்குமலர்ப்பாதாபோற்றி
மாகமுறம்பூஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயென்னையாளவருவாய்போற்றி (௫)

கருங்கடலையடைத்திராவணன்மற்றேனைக்
காரவுணர்சிரந்துணித்தகடவுள்போற்றி
வருமறிஞன்வீடணனுக்கரசுநல்கி
மாயாதவரங்கொடுத்தமாலேபோற்றி
முருகவிழுநறுந்துளபத்தாமாபோற்றி
முச்சுடராய்விளங்குமுழுமுதலேபோற்றி

மருவுலவுமலர்ச்சோலைமலையிலென்றும
வளர்முகிலேயெனையாளவருவாய்போற்றி (சு)

கடலதனைக்கடைந்தமுதம்பகிர்ந்துவானோர்
கலங்காமலருள்புரிகாரணனேபோற்றி
தடமலையைக்குடையாகப்பிடித்தாய்போற்றி
தருக்கனிகன்றாலெறிந்ததகையாய்போற்றி
விடவரவிற்கண்டுயிலுந்தேவேபோற்றி
விதுரனகஞ்சென்றுவிருந்துண்டாய்போற்றி
வடமலையைநிகர்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயெனையாளவருவாய்போற்றி (எ)

பஞ்சவர்கள்பகைதீர்த்ததேவேபோற்றி
பார்த்திபர்க்குக்கீதையுரைபகர்ந்தாய்போற்றி
யஞ்சலென்றுமதமலையையாண்டாய்போற்றி
யகிலமெல்லாந்தானாகுமையாபோற்றி
கஞ்சமலர்த்திருமினுறைமார்பாபோற்றி
கஞ்சனுயிருண்டறிஞர்க்காத்தாய்போற்றி
மஞ்சுதுஞ்சும்பூஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகில்லயெனையாளவருவாய்போற்றி (அ)

உலகமுழுதுண்டகனிவாயாய்போற்றி
யும்பருக்குமெட்டாதமுதலேபோற்றி
பலமிகுத்தகருடவாகனனேபோற்றி
பாண்டவர்க்காத்தூதுசென்றபெரியோய்போற்றி
சிலையையெழிற்பெண்வடிவாய்ச்செய்தாய்போற்றி
தீரவில்லைமிதிலைநண்ணியிறுத்தாய்போற்றி
மலர்மடந்தையுடன்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயெனையாளவருவாய்போற்றி (கூ)

மாதவாபோற்றிமறைநயனாபோற்றி
மதுசூதனாபோற்றிமாலேபோற்றி
சீதராமணிவண்ணாபோற்றிசர்வ
ஜீவதயாபரபோற்றிதிருமகட்கு
நாதனேபோற்றிபஞ்சாயுதனேபோற்றி
நான்முகனைப்பெற்றஜெகந்நாதாபோற்றி
மாதருக்கண்மிகுஞ்சோலைமலையிலென்றும்
வளர்முகிலேயெனையாளவருவாய்போற்றி (ω)

முற்றும்.

உ

சிவமயம்.

# திருவெற்றியூர் என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளிய பழம்புற்றுநாதர் இடப்பாகம்பிரியாள்மீது,

# திருப்பதிகம்.

காப்பு வெண்பா.

கம்பிரியாக்கையர்பின்னேகம்பிரியாப்பாணியர்பா
கம்பிரியாண்மீதுபதிகம்புகல கம்புனனு
கம்பவளவேணியராகம்புரிவெண்டுளிதர்சேய்
கம்பவளமாமுகவன்காப்பு.

தவனர்பல மதிகள்சில குழன்மழையின் மிசைபுலவு
　　தசைமையென மணியிழைகளும்
தனுவையிணை நுதலிலணி திலகமின வயன்மனைவி
　　தனியிசைகள் பருகுசெவியும்
நவரசமொழுகுமொழியுமொளிசெய்சிறுநகையுநிறை
　　நளிர்மதியனையவதனமும்
நறுமினிய பயவமுது கவுணியர்ப ருகவருள்க
　　னகவரையை யனையதனமும்
புவனமுழு வதுமுதவு முதரமொடு கமலமலர்
　　புரையபய வரதகரமும்.
புகலுமறை யவனமரர் தலைவனரி விபுதர்கடல்
　　புடைபரவு புடவியடியார்
பவமகலவிடுபதமு மிலகநின தடிமைதுதி
　　பகரவிழி மகிழவருவாய்
பாகம்பயநாணியதேமொழியாய்
　　நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (க)

அந்தரியுருத்ராணிசக்திசாம்பவிகவுரி
　　யாரணிஜெகன்மோகினி
யம்பிகைதிகம்பரிசடாதரிமகாதேவி
　　யபிராமிபுவனேஸ்வரி

சுந்தரிமனோன்மணியுமாதேவிநீலிதிரி
சூலிதர்மசம்வர்த்தனி
சுமங்கலைமகேஸ்வரித்ரியம்பகிபராசக்தி
தூயைபகவதிபவானி
இந்த்ராதிதேவகணவந்திதாம்புஜசரணி
யேகநாயகிவராகி
யேகாட்சரிமதங்கிசங்கரிசதாநந்தி
யிமயவலிதாட்சாயணி
பந்தவினைநீக்குபார்வதிதேவியெனநிதம்
பகருமெளியேனையாள்வாய்
பாகம்பயநாணியதேமொழியாய்
நாகம்பிரியாத சடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (௨)

செய்யவானிகர்சடைக்காட்டெங்கைகளிவிழித்
தேன்வந்தருந்துதேனே
திகழுமையானனத்தேவதருமீதெழில
சிறந்துபடர்பசியகொடியே
துய்யபவளக்குன்றின்மேவியுலகுயவருட்
சுகமாரிபொழியுமுகிலே
சுருதிவிதியரியுமறிவரியவம்மலைமீது
துள்ளிநடமாடுமயிலே
வையகத்தன்பர்மனவிருள்கெடச்சிகரமிசை
வைத்தபசுமணிவிளக்கே
வாமபாகத்திருந்தவரகத்தடவனஜ
மருவிவிளையாடுமனமே
பையரவின்வாய்த்தேரையெனநோயிலுழல்கின்ற
பதிதனெனையாள்வதென்றோ
பாகம்பயநாணியதேமொழியாய்
நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (௩)

அன்னையேயென்னிருகணினதுதிருவுருவமதை
யகமகிழ்வுறக்காணவும்
அருமறைகடொழுநினதுபதமலரையெனதுசிர
மனுதினம்பணிதல்செயவும்
தந்நிகரிலாநினதுகோயிலைக்கால்கள்பிர
தட்சணஞ்செய்துவரவும்
சலனமில்லாமலெந்நெஞ்சமுந்தனையே
சதாகாலமுங்கருதவும்

மன்னுநின்புகழ்கொளுஞ்சரிதையிருசெவிகுளிர
மகிழ்வுபெருகக்கேட்கவும்
வாய்நினைப்பாடித்துதித்திடவுநினதன்பர்
மனமுவந்திடுபணிவிடை
பன்னுமெனதிருகரம்பத்தியொடுசெயவும்
பரிந்துவரமுதவியாள்வாய்
பாகம்பயநாணியதேமொழியாய்
நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (௪)

வண்ணமாளிகைமீதுதரளமணிநிறையுமம்
மனைகள்பயிலுந்தோற்றமம்
மாதர்திருமுகநலத்தைச்சாளரத்தினெறி
வந்துவினை வாய்க்கவர்ந்து
விண்ணகஞ்செல்லுமதிகண்டந்நலாரலர்
விளம்பிக்கரம்பற்றியே
விட்டந்தரத்தெறிதனிகரும்வளமேவுதிரு
வெற்றிநகரஞ்செழிக்க
எண்ணிலாவிண்ணவருமண்ணவருமலரடி
யிறைஞ்சிடக்கொலுவிருந்தே
யெண்ணுமடியாரிகபரத்துஞ்சுகங்கொள்ள
வினியவரமுதவுதருவே
பண்ணினதடிக்கமலமதனிற்புரிந்திடாப்
பதிதனெனையாள்வதென்றோ
பாகம்பயநாணியதேமொழியாய்
நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (௫)

மணிமேவு பணநாக மிசைதாவு புவிவான
மதிசூரி யர்கடாரகை
மலைபாதலமுநீடு மகராலயமுமாதி
வளர்சீவர் பலபேதமாய்
அணிமாமதலைமேவு சடையீச ரருள்சேரு
மனைநீயு தவியேயிட
மகன்மூவு லகையாள வடன்மாறன் மகளாகி
யலர்மேவு திரிமாதனத்
திணியோடு வரநீயு மிலையோவ தனிலேழை
யொருஜீவ னிலையோபவஞ்
செயுமாப திதமூடர் களும்ஞான முறுமாறு
ஜெகவாழ்வு மருடேவிநீ

பணிதாச னெனதாகி லுடனேயி லுலையாது
　　பலமீதன் மலையோசொலாய்
பாகம்பயநாணியதேமொழியாய்
　　நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (சு)

அடியரிதயப்பணையிலன்பினீர்பாய்ந்தறிவி
　　ஞானந்தம்விளைகரும்பே
யம்பரந்தொடுதளுவின்மாருதமலைத்திட
　　வலைந்துடைவிலாதகனியே
கடமருவுபஞ்சரமுறுதுமறையோதிக்
　　களித்திடுபசுங்கிள்ளையே
கடவுட்குழுக்களொடுவெண்டிரைக்கடலினிற்
　　கடைபட்டிடாவமுதமே
உடல்கருகியொருகாலம்வாயடங்காதென்றும்
　　உலவிவிளையாடுகுயிலே
உலகமிசைபுகரின்றிவிலையளவைமதியாம
　　லொளிவிட்டிலங்குமணியே
படருதவுபிணிகளெனையினிமீதுமணுகாது
　　பாலித்தலுனதுபரமே
பாகம்பயநாணியதேமொழியாய்
　　நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (எ)

புவிமீதிலிசைமேவுபலநூல்களறியேன்
　　பொருட்பலவுரைக்கவறியேன்
புகலாதிமறைசேருமனுவேதுமறியேன்
　　பொருந்துமூவுலகுமெங்கும்
குவிவீசுபுகழ்மீறுமுயர்சீரைநாயேன்
　　குறித்துவாயாற்புகல்கிலேன்
குறையாதபெரியோர்களிருபாதமிருகை
　　குவித்துப்பணிந்தறிகிலேன்
செவியாரநின்மகிமைகேட்டுமறியாக்கொடுந்
　　தீனஞானுமுந்தன்
திருவாலயம்புகுந்தனைநீகதியெனச்
　　சேரினீக்கிடுதலறமோ
பவுஷேறவெனதுடற்பிணிதீரவெந்துயர்ப்
　　பவமாறவருள்புரிகுவாய்
பாகம்பயநாணியதேமொழியாய்
　　நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (அ)

நாககங்கணியர்த்தசந்திரசடாதரிய
ஞதரட்சகிகிர்பாலி
நடனநூபுரசரணிதாருகவிஞசனிபு
ராதனிபுராந்தகிஜெகன்
மோகினிபராசக்திகிரிராஜவரபுத்ரி
முதல்விதிருமால்சோதரி
முண்டகவிலோசனியெனத்தினமுநின்ஞம
மொழியுமடியேனையாள்வாய்
மாகமிசைதாவுதருமேவுகனிதேவர்கள்
மருந்தினினிதெனவிரும்ப
மலர்போதையவர்மாதர்மிகுவாசமெனநாடி
வந்துகொய்திடுநல்வளமும்
பாகசாசனன்முதற்பலர்பணியுமாட்சியும்
பரவுதிருவெற்றிநகர்வாழ்
பாகம்பயநாணியமேமொழியாய்
நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (சு)

மகரநெடுவேலேநடுவங்கமுறுகொடியெனவு
மறியலேத்திரணமெனவும்
வன்றுணைச்சிறையினையிழந்தபுட்போலுமா
லேக்கரும்பினைமானவும்
சகமாயைநோயாலுமுடனேயினுலுஞ்
சலத்தின்மிசைசுழல்வண்டெனச்
சற்றேனுநிலேயிலாதுழல்கின்றவென்மனச்
சஞ்சலந்தனையகற்றி
நிகரிலாநின்னடிக்கன்புமரனடியார்க
ணேயமும்பரமனதுசீர்
நித்தமுமுரைத்திடும்புத்தியுங்கயவர்களை
நேராமலுதவுதிருவும்
பகருமொழிசரதமுந்தினமகமகிழ்ச்சியும்
பாலித்தனினதுபரமே
பாகம்பயநாணியதேமொழியாய்
நாகம்பிரியாதசடாடவியார்
பாகம்பிரியாதபராபரையே (எ)

முற்றும்.

ஓம்சரவணபவாயநமா.

# திருப்பரங்குன்றம் சண்முகநாதர்பேரில்

## கட்டளைக்கலித்துறை.

---

தாதாருநின்மலர்ப்பாதாரவிந்தந்தனைப்பணியென்
மீதாரருள்செய்யவாதாநல்லன்பர்வினையகற்றும்
நீதாமனுமுன்பிதாதாமறியநிகழ்த்துகுரு
நாதாமனமிரங்காதாபரங்கிரிநாயகனே (௧)

மையாலமின்னலைச்செய்யாதயின்றுமண்வானுலகும்
நையாமற்காத்திடுமையானனர்செல்வநாடொறுமென்
மெய்யானதுபிணிப்பையாடரவுவிழுங்கரியை
யையாநிகர்த்தினியெய்யாமற்காநல்லறுமுகனே (௨)

மந்தாநிலமுறுஞ்சந்தாசலமுனிவன்பணிநின்
செந்தாமரைநிகருந்தாள்கதியன்றித்திக்கிலையே
கொந்தாரும்பூங்கடப்பந்தாரசைந்துகுலவுபுய
நந்தாதநற்சுகந்தந்தாள்பரங்கிரிநாயகனே (௩)

மண்டார்தயித்தியத்தண்டாரைவாட்டிவலாரியினைப்
பண்டாயரசெனக்கண்டாய்நின்பாதம்பணியுமென்னை
மிண்டாகியபிணியண்டாமனீக்கிவிடன்மலையா
தண்டாயுதங்கரங்கொண்டாய்பரங்கிரிச்சண்முகனே (௪)

கன்றாபலமுனங்கன்றாமலண்டிக்கதிக்கவொரு
குன்றாற்பலமென்றுங்குன்றாமற்காத்திடுங்கோன்மருகா
நின்றாள்பணியென்னைவன்றாபவெம்பிணிநேர்ந்திடுத
னன்றாதிருப்பரங்குன்றாய்குறவல்லிநாயகனே (௫)

பாகாமொழிவல்லிபாகாகரத்தயில்பற்றுநல்வி
சாகாவதனமஞ்சாகாதறுமுகந்தாங்குமுத்த
மாகாவரசற்குமாகாலயந்தரும்வன்பனிரு
வாகாசிறியன்முன்வாகாபரங்கிரிவாழ்குகனே (௬)

மஞ்சாருமெய்யெழிற்பஞ்சாயுதக்கரமான்மருகா
அஞ்சாரியமபுரஞ்சாரவீட்டுமெயிற்கரவென்
நெஞ்சானதுபிணிக்கஞ்சாமற்காத்திடனின்பரமே
கஞ்சார்பரங்கிரிசஞ்சாரகுஞ்சரிகாதலனே (௭)

பொங்காதவஞ்சுடவங்காழ்ந்துவாடும்புழுநிகராய்
மங்காதுவெம்பிணிதங்காதகற்றிவருந்துமென்றன்
வெங்காரந்தீர்சுவர்க்கங்காவல்பூண்டிடும்வேந்தனருள்
சிங்காரக்குஞ்சரிபங்காபரங்கிரிச்சேவகனே (௮)

வல்லாந்தனமடநல்லார்மயக்கில்வருந்துமட
வல்லானதென்மனநில்லாதகற்றிமெய்யார்பிணியாம்
பொல்லாப்பணிநினதெல்லாமருள்கண்டுபோகச்செய்வாய்
மல்லாறிருபுயவல்லாய்பரங்கிரிவாழண்ணலே (௯)

பாராயனல்வளிநீராய்வெளியெனப்பற்றிலரா
யோராரகத்துமுள்ளாராயனைத்துமுறைபரன்கு
மாராசிறியன்முன்வாராயெனைவருத்தும்பிணியைத்
தீராயெனைமுகம்பாராய்பரங்கிரிச்சேவகனே (௰)

முற்றும்.